# தீவகத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் - சாட்டி பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஜனனி செந்தில்குமரன்**

தொல்லியல் அலகு, வரலாற்றுத் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*Senthilljanani949@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** *ஆசியாவில் நீண்ட கால பாரம்பரிய வரலாற்றுத்தொன்மை மற்றும் பல்லிணப்பண்பாட்டு அம்சங்கள் கொண்ட நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் வடபகுதி தற்போதைய யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை குறிப்பதாகும். யாழ்ப்பாணத்தில் தீவகப்பிரதேசமானது தனித்துவமாக விளங்குகின்றது. வட இலங்கையை பொறுத்த வரையில் கி.பி 14ம் நாற்றாண்டின் முன்னரான வரலாறு புகைப்படிந்ததாகவே காணப்பட்டது. தொடர்ச்சியான வரலாறுகள் தெளிவு இன்மையாலும் இலக்கியங்களில் வரலாறுகள் மறைமுகமாக கூறப்பட்டமையாலும் வடஇலங்கை வரலாறு பற்றி அறிய முடியவில்லை. ஆனால் பிற்காலத்தில் வளர்ச்சி அடைந்த தொல்லியல் துறையினால் புதுவெளிச்சம் அடைந்தது. இவ் தொல்லியல் ஆய்வுகள் தீவகத்தின் சாட்டி பிரதேசத்தில் 2005ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது வடஇலங்கைக்கு புதுவெளிச்சம் ஊட்டியது எனலாம். தீவக வரலாறானது தொன்மையானது என்பதனை அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் உறுதிசெய்கின்றன. அவ் ஆய்வில் ஈமச்சின்னங்கள், சுடுமண்கிணறுகள், பாவனைப்பொருட்கள், சீன,அராபிய மட்பாண்டங்கள், நாணயங்கள் போன்ற பல சான்றுகள் கிடைக்கப்பட்டது. இங்கு கிடைக்கப்பட்ட மட்பாண்டங்கள் கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் ஆகும். இவை பெருங்கற்கால பண்பாட்டை பிரதிபலிக்கின்றது. பெருங்கற்காலம் என்பது பெரிய பெரிய கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு ஈமச்சின்னங்களை அமைத்ததினால் இக் காலம் சிறப்பாக பெருங்கற்காலம் என அழைக்கப்பட்டது.ஏறக்குறைய 1000 ஆம் ஆண்டு தொன்மையானது. இப்பிரதேச ஆய்வில் குடைக்கல், குழியடக்க ஈமச்சின்னங்கள் கிடைக்கப்பெற்றது. இதன் தொன்மையினை சங்ககால புறநானூறு , குறுந்தொகை, நற்றிணை, மலைபடுகடாம் போன்ற இலக்கியங்கள் அதன் தொன்மையினை வெளிப்படுத்துகின்றது. இது தீவக வரலாற்றுக்கு மட்டுமின்றி வடஇலங்கை வரலாற்றுக்கு புதுவெளிச்சம் ஊட்டியது எனலாம். இவ்ஈமச்சின்னங்களுடன் சில வகை மிருகங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் எலும்புகளின் தடயங்கள் இப்பிரதேமானது பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த சமுதாயத்தின் மூலமாக ஒரு நிலையான ஒரு சமூகம், குடியிருப்பு, பொருளாதாரம், சமயம், கலை அம்சங்கள் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது. இதன் ஊடாக சாட்டி பிரதேச பண்டைய மக்களின் வாழ்க்கை முறையினை கண்டறிதல் பிரதான நோக்கமாக உள்ளது. அதனோடு இப்பிரதேச தொல்லியல் ஆய்வுகளின் முக்கியத்துவத்தை கண்டறிவதுடன் அப்பிரதேசத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தேவையை வெளிப்படுத்துதல் நோக்கமாகும். இவ்வாய்வினை நிறைவு செய்யும் பொருட்டு ஆய்விற்கான முதன்மைத்தரவுகள், கள ஆய்வுகளின் அடிப்படையில் திரட்டப்பட்டவையாகும். அத்துடன் இவ் ஆய்வினை எழுதவதற்கு இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பனவும் உதவியுள்ளன. எனவே சாட்டி பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் அப்பிரதேச தொன்மையையும் பண்பாட்டு சமய நம்பிக்கைகள், வாணிபம், நினைவுக்கல் அமைக்கும் முறை போன்றவற்றை அறிவதோடு தொடர்ச்சியான தொன்மையான வரலாற்றை அறிய முடிகின்றது. இதனால் இவ் பெருங்கற்கால மையமாக சாட்டி விளங்குவதால் இவ்ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.*

**திறவுச் சொற்கள்** - தொல்லியல்ஆய்வுகள், சாட்டி, தீவகம், பெருங்கற்காலம்

## 1. ஆய்வின் அறிமுகம்

தொல்லியல் என்பது பண்டைய மனிதன் விட்டுச்சென்ற பொருட்களைக்கொண்டு கடந்தகால வரலாற்றை மீளக்கட்டியெழுப்பவதாகும். இவற்றில் மட்பாண்டங்கள்,கல்வெட்டுக்கள் ஈமத்தாழிகள்,மனிதஎச்சங்கள், கட்டிடஅழிபாடுகள் போன்றன முக்கியமானவையாக காணப்படுகின்றது. இவற்றினை அழியவிடாமல் பாதுகாத்து வரும் எதிர்கால சந்ததியினருக்கு பயன்பெறும் வகையில் இவ் தொல்லியல் சான்றுகள் முக்கிய இடம் பெறுகின்றது. இலங்கையில் பெருவாரியாக தமிழர் வாழும் பிராந்தியங்களில் ஒன்றாக யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்ற தீகம் ஒன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு தொடர்ச்சியான பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் பிராந்தியமாக தீவகம் காணப்படுகின்றது. குறிப்பாக பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தி

நிற்பதனை காணலாம். இவ்வரலாற்று பின்னணியில் தமிழருக்கான வரலாற்றுத் தொன்மையும், ே்ர்வீகத்தையும் தமிழ்மொழி,இந்துமதம் போன்ற அம்சங்களை வெளிப்படுத்தி காட்டுபவையாக திவகத்தில் சாட்டி, அல்லைப்பட்டி, காரைநகர், நெடுந்தீவு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அவ்வாய்வுகளில் சாட்டி பிரதேசம் சிறப்பு பெறுகின்றது. அண்மைகாலத்தில் வட இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய தொல்லியல் மையங்களில் தீவகத்தில் உள்ள சாட்டியும் ஒன்றாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்திலுள்ள ஒரு கடற்கரைக் கிராமம் ஆகும். இப் பிரதேசம் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகங்களை கொண்ட கிராமம் என்ற வகையில் சாட்டிக்கு தனித்துவமான வரலாற்றுச் சிறப்பு உண்டு.
சாட்டி பிரதேசத்தின் அமைவிடம் புவிச்சரிதவியல் அடிப்படையில் தமிழகத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதால் அவ்விடம் பண்டுதொட்டு தென்னிந்தியாவுடனும், தென்னிலங்கையுடனும், யாழ்ப்பாணக் குடாநாடு ஏற்படுத்திக் கொண்ட கடல் வழித் தொடர்பிற்கு குறுக்கு நிலமாகவும் தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய தொடக்ககால வாயிலாகவம் திகழ்ந்ததெனக் கூறலாம். இவ் இடத்தினைச் சுற்றியுள்ள தீவுகள் பற்றியும் பண்டைய இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஐரோப்பியகால ஆவணங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களின் எதிர்பாராமல் கிடைத்த தொல்லியல் சின்னங்களும் இவ் இடத்தின் பழமையையும், அதன் சிறப்பையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த சமதாயத்தின் மூலமே ஒரு நிலையான சமூகக் கட்டமைப்பினை உடைய நாகரிக வரலாறு பரவி வளர்ச்சி அடைந்ததினைக் காணலாம். இக் காலத்திலேயே தான் நிலையான குடியிருப்பு, நீர்ப்பாசனம், விவசாயம், நகரமயமாக்கம், கறுப்பு சிவப்பு மட்பாண்ட உருவாக்கம், சிறுதொழில்நுட்ப வளர்ச்சி இரும்பின் உபயோகம், உலோகப்பயன்பாடு, சமயம், மொழி, வணிகம் என பல்வேறு அம்சங்களில் வளர்ச்சி நிலை ஏற்பட்ட காலமாகும். இதனைத் தொடர்ந்து தென்னிந்திய ஆரியசக்கரவர்த்தி ஐரோப்பியரின் ஆதிக்கம் ஏற்பட்டது. தீவகத்தில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளும் இடத்தில் பல சான்றுகள் கிடைக்கப்பெறலாம். ஆகவே தீவகப் பிரதேசத்தின் தொன்மையினைப் பற்றி இன்னமும் வெளிக்கொணரப்படாத விடயங்களை வெளிப்படுத்த திணைக்களங்கள் அக்கறையின்மை முக்கிய பிரச்சனையாக காணப்படுகின்றது. மற்றும் மக்களிடம் தொல்லியல் சான்றுகளின் மதிப்பினை உணர்த்தி அவற்றை பாதுகாத்து வரலாற்றை வெளிப்படுத்த முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே தீவகப் பிரதேசத்தில் சாட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே கடற்கரை பகுதிகளை அண்டி மக்கள் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாய்வானது பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் சாட்டியில் மேற்கொள்ளபபட்டது.

## 2. ஆய்வின் பரப்பும் காலமும்

ஆய்வு ஒன்றினைப் பொறுத்த வரை ஆய்வுப் பிரதேசம் என்பது வரையறுக்க வேண்டியுள்ளது.அந்த வகையில் என் ஆய்விற்கான பிரதேசம் தீவகப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியான சாட்டி பகுதி உள்ளடக்கியுள்ளேன். இவ் ஆய்வுப் பிரதேசங்கள் புராதன தொல்லியல் மையங்களையும் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் அங்கு காணப்படுகின்ற மரபுரிமை அம்சங்களையும் ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளதால் இவ் பகுதிகளை தெரிவு செய்துள்ளேன். இவ் ஆய்விற்குரிய காலப்பகுதியாக ஆதிஇரும்புக்காலம் முதல் போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் வரை உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது தீவகத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளின் மூலம் மக்களின் பண்பாட்டு பாரம்பரிய மரபுகளை அடையாளப்படுத்தல் என்ற வகையில் வரலாற்று அணுகுமுறையில் விபரண ஆய்வாக அமையப்பெற்றுள்ளது. இவ் ஆய்வானது முன்னிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பவற்றைக் கொண்டு இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கும் வரலாறுகள் செய்திகள் என்பவற்றை தொல்லியல் ஆதாரங்களுடன்

ஒப்பிட்டு நோக்கி அதன் உண்மைத் தன்மையை அறிந்து இத்தகவல்களையும் சான்றுகளையும் தொல்லியல் இடங்களுக்கு சென்று அவதானித்தல், நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் என்பனவற்றின் ஊடாக பெறப்பட்ட உண்மைத்தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அணுகுமுறையியல் மூலம் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆய்வின் தரவுகளானவை முதல்நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரலுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. முதற்தரச் சான்றுகள்

**சங்க இலக்கியங்கள், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல் மற்றும் வினாக்கொத்துக்கள், வெளிநாட்டார்குறிப்புகள், தொல்லியல் எச்சங்கள்** போன்றனவாகும். முதலாம் நிலைத்தரவுகளின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ன பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பிரதேசத்தின் வரைபடத்தைப் பெற்று ஆய்வுப் பரப்பிற்கு உட்பட்ட முதியவர்கள், அனுபவம் வாய்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டு பிரதேச பழமை வாய்ந்த தொல்லியல் மையங்கள் பற்றிய தகவல்களை அறிந்து அவர்களுடன் கலந்துரையாடி சில தரவுகளை, **வினாக்கொத்து, உரையாடல்**, மூலமாகவும் **பாளிநூல்கள், மூல இலக்கியங்கள்** மூலமாக தகவல்களை பெற முடிந்தது.

## 5. இரண்டாம் நிலைத்தரவுகள்

இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன **வரலாற்றாசிரியர்கள் உடைய நூல்கள், ஆண்டுமலர்கள்** என்பவற்றை சேகரித்து தகவல்களைப் பெற்று ஆவணப்படுத்தலுக்கு வேண்டிய தரவுகளை நேர்த்தியாக சேகரிக்க முடிந்தது.

## 6. ஆய்வின் முடிவு

அண்மைகாலத்தில் வட இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய தொல்லியல் மையங்களில் திவகத்தில் உள்ள சாட்டியும் ஒன்றாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்திலுள்ள ஒர் கடற்கரைக் கிராமம் ஆகும். இப் பிரதேசம் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகங்களை கொண்ட கிராமம் என்ற வகையில் சாட்டிக்கு தனித்துவமான வரலாற்றுச் சிறப்பு உண்டு.

## 7. மேலாய்வுகள்

சாட்டிப் பிரதேசத்தில் 1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக போராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் இரகுபதி, சுவாமி ஞானப்பிரகாசர் போன்றவர்களின் மேலாய்வில் பல தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றன. அவ்விடத்தில் பல கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்கால பண்பாட்டை உறதிப்படுத்துகின்றது. இதன் மூலம் தீவகத்தின் வரலாற்று தொன்மையினை உறதிப்படுத்தியுள்ளன. இதனை பேராசிரியர் சிற்றம்பலம் எழதிய ‘‘யாழ்மாவட்டத்தின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுக்களம், ஆதிக்க கடிகளம்,’’ என்ற நூலும் பேராசிரியர் இரகுபதி அவர்கள் எழுதிய யாழ்ப்பாண புராதன குடியேற்றங்கள் என்ற நூலின் வாயிலாக அறியமுடிகின்றது. அதனை தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களும் மாணவர்களும் இணைந்து 2004, 2005 ஆண்டு காலப்பகுதியில் சாட்டியில் தொல்லியல் அகழ்வாய்வு ஒன்றினை நடாத்தினர். சாட்டிப் பிரதேசத்தில் 100அ இடைவெளியில் 30 க்கும் மேற்பட்ட ஈமச்சின்னங்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டு அவற்றில் 10 இடங்கள் ஆய்வுக்கு உட்படத்தப்பட்டது. இங்கிருந்த ஈமச்சின்னங்கள் முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்ட இருப்பதைக் காணமுடிகின்றது. மேலும் மட்பாண்டங்கள் ,ஈமச்சின்னங்கள், சுடுமண்கிணறுகள்,எலும்புகள் போன்றன கிடைக்கப்பட்டுள்ளன. அவற்றை விரிவாக நோக்குவோம்.

### *7.1 ஈமச்சின்னங்கள்*

- o குடைக்கல் ஈமச்சின்னங்கள்
- o குழியடக்க ஈமச்சின்னங்கள்

ஈமச்சின்னங்கள் யாழ்ப்பாணத்தில் வேலணைக் கிராமத்தில் சாட்டி என்ற இடத்தில் 2005 ஆம் அண்ட மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவ்வகை ஈமச்சின்ன மரபு இருந்திருக்கலாம் என்பதற்கு அதாரங்கள் கிடைத்துள்ளன. வைரமான கற்கள் எதுவும் காணப்படாத இப்பிராந்தியத்தில் இவ் இமச்சின்னம் மட்டம் வைரமான கல்லில் அமைக்கப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கதாகும். ஏறத்தாழ இரண்டடி உயரமடைய வைரமான இக்கல் குடை போன்ற வடிவில் இதன் மேற்பாகம் செதுக்கப்பட்டு அதன் உட்பகுதி ஒன்றரை அடி ஆழத்தில் வட்டமாகக் கடையப்பட்ட அக் கற்கள் மனித எலும்புகள் வைக்கப்பட்ட மண்ணில் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டள்ளது. இதனுள் இருந்த எலும்புகளை அய்வு செய்த யாழ்ப்பாண பல்கலைக் கழக பீடத்தினர் அவற்றுள் சிறிய எலும்புகள் வயது குறைந்த மனிதனுக்கு உரியதெனவும், மிகப் பெரிய எலும்புகள் குதிரைக்கு உரியதெனவும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

### *7.2 சுடுமண் கிணறு*

சாட்டிப் பிரதேசத்தில் 2000 வருடங்களுக்கு முற்பட்டது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் சுடு மண்ணால் செய்யப்பட்ட மிகப் பெரிய கிணறு கண்டுபிடிக்கப்பட்டள்ளது. இச் சுடுமண்கிணறு வட்டவடிவில் சிறு சிறு துண்டுகளாக சுடப்பட்ட களிமண் தட்டுக்களைக் கொண்ட வட்ட வடிவில் கட்டப்பட்டிருந்தது. 3 அடுக்குகளில் கட்டப்பட்ட சுடுமண் கிணற்றின் பாகங்கள் கண்டறியப்பட்டன. இவ் 5 சுடு மண் வளையங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 4 அடி உயரமான கிணறாகும் இச்சுடுமண் வளையங்கள் ஒவ்வொன்றும் ஒன்று அரை அடி விட்டமும் 2 அடித் தடிப்பும் ஒரு அடி உயரமும் கொண்டவை ஒரு அடி உயரமான 5 வளையங்கள் மொத்தம் 4 அடி உயரம் எனக் கண்டறிப்படப்பட்டுள்ளன.

### *7.3 மட்பாண்டஓடுகள்*

கிராமிய எழுத்துப் பொறிப்புக்கள், மட்பாண்டங்கள் ஈமச்சின்னங்களுடன் கண்டெடுக்கப்பட்டன. இரு வகைப்பட்ட மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அதில் பெருங்கற்காலத்தக்குரிய கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளது. இவை மேலாய்விலும் கிடைக்கப்பட்டுள்ளன. அத்தோடு இரு பிராமிய எழுத்துக்கள் கண்டறியப்பட்ட மட்பாண்ட ஒடுகள் அகழ்வாய்வில் கிடைக்கப்பட்டுள்ளன. மட்பாண்டங்களை நேரில் பார்வையிட்ட தமிழ் அறிஞரான சுப்பராயன் தமிழகத்தில் அரிக்கண் மேட்டிற்கு அடுத்து சாட்டியில் தான் நேரில் இருந்த நேரடியாக மட்பாண்டங்கள் கிடைக்கப்பெற்றதாக கறிப்பிட்டள்ளார். இங்கு கிடைக்கப்பெற்ற மட்பாண்ட ஒடுகளில் ராசா என்ற மட்பாண்ட ஒடு பொறிக்கப்பட்டிருந்தது. மேலும் கறியிடுகளம் காணப்படுகின்றன. இச் சான்றுகள் மூலம் சாட்டிப் பிரதேசத்தின் வரலாற்றுத்தொன்மை, அயல் நாட்டாருடன் வாணிப தொடர்புகள் வெளிப்படுத்துகின்றன.

### *7.4 பிராமிய எழுத்து பொறிக்கப்பட்ட மனித எலும்பு*

ஈமச் சின்னங்களில் மனித வடிவில் வெட்டப்பட்ட அதன் ஒரு பக்கம் தட்டை வடிவமைக்கப்பட்ட அதன் மேல் ஒன்பது கிராமிய எழுத்துக்கள் தட்டையாக வடிவமைக்கப்பட்ட அதன் மேல் ஒன்பது கிராமிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் எழுத்துக்கள் சரிவர வாசிக்க முடியாத நிலையில் காணப்பட்டாலும் இரண்டாவது வரியில் உள்ள எழுத்துக்களை பாகன் என வாசிக்கப்பட்டுள்ளது.

இச்சான்றுகள் தீவக வரலாற்றுக்கு தொன்மையான வரலாறு காணப்பட்டது என்பதனையும் மேலும் இங்கு தொடர்ச்சியான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட வடஇலங்கை வரலாறுகளை வெளிக்கொண்டு வருவதில் இவ் ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

*ISBN: 978-955-627-013-6* 

## 8. முடிவுரைகளும் பரிந்துரைகளும்

### *8.1 முடிவரை*

**"தீவகத்தில் தொல்லியல் ஆய்வுகள் - சாட்டி பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு"** என்பது எனது ஆய்வின் தலைப்பானம். உலகிலே மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டது இலங்கை நாடு ஆகும். இலங்கையின் யாழ்தீவகம் தனிச்சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. இதன் வரலாறு பாளி இலக்கியங்களில் மறைமுகமாக கூறப்பட்ட போதிலும் விரிவான தகவல்களை அறிய முடியவில்லை. இதனை அறிந்து கொள்வதில் தொல்லியல் ஆய்வுகள் முக்கிய இடம் பெறுகின்றது. 1970ம் ஆண்டுகளின் பின் தீவகத்திலும் தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தீவகப் பகுதிகளில் சாட்டி, அல்லைப்பிட்டி, காரைநகர், நெடுந்தீவ போன்ற பகுதிகளில் ஆய்வுகள் இடம்பெற்றது. இவ் ஆய்வுகளின் மூலம் பலதரப்பட்ட சான்றுகள் கிடைக்கப்பட்டன.

இவ் யாழ்ப்பாண பிரதேசத்தின் வரலாறு புகைப்படிந்ததாக காணப்பட்டது. கி.பி 14ம் நூற்றாண்டின் முன்னரான வரலாறு இலக்கியங்களில் விரிவாக அறிய முடியவில்லை. ஆனால் தொல்லியல் ஆய்வுகள் இவ் பிரதேச வரலாற்றிக்கு புதுவெளிச்சம் கொடுத்தன.. தொன்மையானது என்பதனை ஈமச்சின்னங்களும், சுடுமண்கிணறுகளும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இவ் ஆய்வுகளின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டது.
தீவகமானது பரந்துபட்ட பிரதேசமானது. ஆரம்ப கால மக்கள் கடற்கரை பகுதிகளிலே தமது குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்தனர். இதனால் அவர்களின் பாவனைப்பொருட்கள் அதனை அண்டிய பிரதேசங்களில் காணப்படும். கடல் அரிப்பு, மணல்கொள்ளை, கடல்தாவர அழிப்பு காரணமாக புதையுண்டு காணப்படும் தொல்லியல் சான்றுகள் அழிவடைந்தததுடன் வேறு இடங்களிற்கு கொண்டு செல்லப்படும். இதனால் தீவக வரலாற்று உண்மைகள் வெளிப்படாமல் இருப்பதற்கு காரணமாகின்றது.தீவக மக்களிடம் தொல்லியல் சின்னங்களின் பற்றிய அறிவும் அதன் முக்கியத்துவமும் அறிந்திருக்கவில்லை.நாகரிக மாற்றத்தால் அதன் பயன்பாடும் தேவைப்படவில்லை. இதனால் பாதுகாக்கும் தன்மை பெரிதளவில் காணப்படவில்லை.

### *8.2 பரிந்துரைகள்*

மேற்கூறப்பட்ட முடிவுரையில் காணப்படுகின்ற பிரச்சனைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு சிறந்த முறையில் என்னால் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தீவகமானது தொன்மையான வரலாற்றைக் கொண்டது என்பதனை சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது. இத்தகைய சான்றுகளை அழியவிடாமல் பாதகாப்பது அவசியம் ஆகும். அவை நமது சொத்துக்களாகும். இலக்கியங்களில் கூறப்படாத தகவல்களையும் அவற்றில் கூறப்பட்ட

வரலாறு உண்மையானது என்பதனை நிருபிப்பதால் தொல்லியல் சின்னங்களை பாதுகாத்தல் அவசியம்.

மக்கள் இடையே தொல்லியல் சான்றுகளின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறி அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும். இதன் மூலம் தொல்லியல் எச்சங்களை பாதுகாக்க முடியம். மண்மேற்பரப்பில் கிடைக்கப் பெறும் சான்றுகளை பாதுகாக்கும் எண்ணங்கள் ஏற்படும். தீவக வரலாற்று தொன்மையை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஆய்வுகளில் கிடைக்கும் சான்றுகளை பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். ஆய்வுகள் சார்பாக வெளியிடப்படுகின்ற நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மும்மொழிகளிளும் வெளியிடப்பட வேண்டும். தீவக மக்களிடம் தமது பிரதேச தொன்மையை அறிந்து கொள்ளல் அவசியம்.

தீவகத்தில் தொல்லியல் மையங்கள் இன்னும் விரிவாக அகழ்வாய்வு செய்யப்பட வேண்டும். மற்றும் தற்செயலாக கண்டறியப்பட்ட தொல்லியல் சின்னங்கள் கிடைக்கப்பெற்ற இடங்களை ஆராயப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. தீவகத்தில் குறிப்பிட்ட இடங்களே அகழ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. அவை மேலும் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

தீவகத்தில் தொல்லியல் ஆய்வுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்களான பு'பரட்ணம் அவர்களும், கிருஸ்ணராசா அவர்களின் வழிகாட்டல்களிலும், தொல்லியல் திணைக்கள உதவியுடனும் திவகப்பகுதிகளில் தொல்லியல் மேலாய்வுகள் இடம்பெற்று அவை விரிவாக அகழ்வாய்வு இடம்பெறுவதன் மூலம் திவக வரலாற்றுக்கும், தமிழ் மக்களின் வரலாற்றுக்கும் புதுவெளிச்சம் ஊட்டும் வகையில் தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப்பெறம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**உசாத்துணை நூல்கள்**

குகபாலன். கா., 2000 தீவகம் பல்துறை நோக்கு புவியியல்துறை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்.
சிற்றம்பலம்.சி.க, 1993, யாழ்ப்பாண தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு
சிற்றம்மலம்.சி.க., 1993,யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
தனிநாயகம் அடிகள்,1980, தமிழ் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் ,செல்வநாயகம் சொற்பொழிவகள் , தந்தை செல்வா அறம்காவல் குழு யாழ்ப்பாணம்.
புஷ்பரட்ணம். ப., 1993, பூநகரி தொல்பொருள் ஆய்வு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
புஷ்பரட்ணம். ப., 2000, தொல்லியல் நோக்கில் தமிழர் பண்பாடு, குமரன் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
புஷ்பரட்ணம். ப., 2000, பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் பிரமைிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, கொழும்பு தமிழ் சங்க வெளியீடு.
முாணிக்கவாசகர். சு., 2006. வேலணை ஒரு வரலாற்று அறிமுகம், வேலனண வெளியீட்டு சபை, கொழும்பு.
வேலுப்பிள்ளை. கு., 1918, யாழ்ப்பாண வைபவ கைமுகி, யாழ்ப்பாணம்.
வையாபுரிப்பிள்ளை..எஸ்., 1949, தமிழர் பண்பாடு, தமிழர் புத்தகாலயம், சென்னை.
மீனாட்சி சுந்தரனார்., தே., 1974, தமிழும் பிற பண்பாடும், நியுஸ்சென்யுரி புக்கவுஸ், சென்னை 2ம் பதிப்பு .
அனித்தா யோகராசா., 2014, யாழ்ப்பாணப் பண்பாடு அன்றும்- இன்றும், புத்தக இல்லம், கொழும்பு.
கிருஸ்ணராசா., செ., செ, 1998, தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், அன்னை அச்சகம்.
குணசிங்கம். மு., 2008,இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு கிமு 300 – கிபி 2000, சிட்னி.
கிருஸ்ணராசா. செ., 1979, யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள பிரதான தொல்லியல் தளங்கள் (கி.பி.15ம் நூற்றாண்டு வரை) யாழ்ப்பாணப்பல்களைக்கழகம்.